குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஓசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 77-2014

அ.சா. 2

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. நாராயணசாமி(எ) நாராயணன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.நஞ்சுண்டப்பா |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 40 |

The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition.

**1873-ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. 17.02.2026**

**(எதிரிகள் ஆஜர்)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது அத்திமுகத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் 2வது சாட்சி கையெழுத்து என்னுடையது ஆகும்.

கடந்த 2010 ஆண்டு தாசன் புரம் பகுதியில் யாரோ ஒருவரின் கழுத்தில் இருந்த செயினை பறிக்க முயன்றதாக சுமார் 4 நபர்கள் அவரைப்பிடித்து அத்திமுகத்தில் உள்ள சேர்மேன் முனிசந்திரப்பாவிடம் ஒப்படைக்க அவர் காவல் நிலையத்தில் ஒப்படைக்க சொன்னதால் செயினை பறிக்க முயன்ற 3 நபர்களை என்னுடைய காரில் அழைத்து சென்று காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்கள். செயினை பறிக்க முயன்ற நபர்களை எனக்கு அடையாளம் தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுகொண்டதால் கையொப்பம் செய்தேன். நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் எழுதப்பட்டுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. **(ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது சாட்சி மைகயொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு குறித்து வேறு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. ஊர்க்காரர்கள் கையெழுத்து செய்ததால் நானும் கையெழுத்து செய்தேன்.

சாட்சி சட்டப்படி 161 குவிமுச பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்த காரணத்தினால் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க **அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக** அறிவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 30.03.2010ம் தேதி காலை 8 மணிக்கு அத்திமுகம் சூளகிரி சாலையில் பேரண்டப்பள்ளி பிரிவு ரோடு அருகே ஆஜர் எதிரிகள்

அந்தகுமால்ர என்பவரிடமிருந்து தங்க செயினை பறிக்க முயன்றபோது, அங்கிருந்தவர்களுடன் நானும் சேர்ந்து அவர்களை பிடித்து காவல் நிலையம் கொண்டு வந்து ஒப்படைக்க அங்கு ஆஜர் எதிரிகளில் அண்ணாதுரை என்ற எதிரி அதே நாள் காலை 11.00 மணிக்கு காவல் நிலையத்தில் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திற்கு நானும் ராதாகிருஷ்ணன் என்பவரும் சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்து அந்த விவரத்தை போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது, எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் ஊர்க்காரர்கள் கையெழுத்து செய்ததாக சொல்வது எத்தனை நபர்கள் 10 நபர்கள்.

**மறு விசாரணை இல்லை.**

**சாட்சி கூறியதனை என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு சரியென ஒப்புக்கொண்டார்.**

**(ஓம். /—ஆர். நரசிம்மமூர்த்தி,)**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1 ஓசூர்.**